# 10

# புதிய பிறப்பு

மக்கள் மனந்திரும்பி, ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவை விசுவாசிக்கும்போது, அவர்கள் ‘‘மறுபடியும் பிறந்தவர்களாக’’ ஆகிறார்கள். மறுபடியும் பிறத்தல் என்பதின் அர்த்தம் என்ன? இந்த அத்தியாயத்தில் அதைப்பற்றி நாம் பாப்போம்.

மறுபடியும் பிறத்தல் என்பதின் அர்த்தத்தை நாம் புரிந்துகொள்ள வேண்டுமானால் முதலில் மானிடர்களின் இயல்பை அறிந்துகொள்ள வேண்டும். நாம் வெறுமனே சரீரப்பிரகாரமானவர்கள் மட்டுமல்ல, ஆவிக்குரியவர்களாகவும் இருக்கிறோம் என்று வேதவசனம் சொல்லுகிறது. எடுத்துக்காட்டாக, பவுல் இப்படி எழுதியிருக்கிறார்:

> சமாதானத்தின் தேவன்தாமே உங்களை முற்றிலும் பரிசுத்தமாக்குவாராக. உங்கள் *ஆவி ஆத்துமா சரீரம்* முழுவதும், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து வரும்போது குற்றமற்றதாயிருக்கும்படி காக்கப்படுவதாக [1 தெச. 5:23 அழுத்தம் கொடுக்கப்பட்டுள்ளது].

பவுல் சுட்டிக்காட்டியிருக்கிறபடி நாம் ஆவி, ஆத்துமா, சரீரம் என்ற மூன்று பகுதிகளையும் கொண்ட ஜீவிகளாக இருக்கிறோம். இந்த மூன்று பகுதிகளுக்கான திட்டவட்டமான விளக்கத்தை வேதவசனங்கள் கொடுக்காவிட்டாலும், இந்தச் சொற்களின் அர்த்தத்தைக் கொண்டு இவைகளை நம்மால் வேறுபடுத்திப் புரிந்துகொள்ள முடியும். நமது *சரீரம்* என்பது நமது மாமிசம், எலும்புகள், இரத்தம் போன்றவைகளைக் குறிக்கிறது என்று நாம் எடுத்துக்கொண்டிருக்கிறோம். நமது *ஆத்துமா* அறிவுசார்ந்ததாகவும், உணர்வுசார்ந்ததாகவும் இருக்கிறது – நமது மனம். நமது *ஆவி* நம்மிலுள்ள ஆவிக்குரிய பகுதியாகும். அப்போஸ்தலனாகிய பேதுரு இதை ‘‘இருதயத்தில் மறைந்திருக்கிறது’’ என்று குறிப்பிடுகிறார் [1 பேதுரு 3:4].

ஆவியைச் சரீரப்பிரகாரமான கண்ணால் காண முடியாது என்கிற படியால், மறுபடியும் பிறக்காத மக்கள் அப்படி ஒன்று இல்லை என்று சொல்லுகிறார்கள். ஆனால் வேதாகமமோ நாம் எல்லோருமே ஆவிக்குரிய ஜீவிகள் என்று தெளிவாகச் சொல்லுகிறது. ஒரு நபர் மரிக்கும்போது அவனுடைய சரீரமே செயல்படாமல் நின்றுபோகிறது என்றும், அவனுடைய ஆவியும் ஆத்துமாவும் எப்போதும் போலவே செயல்படுகிறது என்றும் வேதவசனம் சொல்லுகிறது. மரணத்தின்போது இவை ஒன்றாகச் சேர்ந்து தேவனுக்கு முன்பாக நியாயத்தீர்ப்புக்காக நிற்கின்றன (பார்க்க, எபி. 9:27). நியாயத்தீர்ப்புக்குப் பிறகு அவை பரலோகத்துக்கோ அல்லது நரகத்துக்கோ செல்லுகின்றன. இறுதியாக உயிர்த்தெழுதலின்போது, ஆத்துமாவும் ஆவியும் உயிர்த்தெழுந்த சரீரத்தோடு சேர்ந்துகொள்ளுகின்றன.

### மானிட ஆவியைக் குறித்த கூடுதலான விளக்கம்

பவுல் அப்போஸ்தலன் ஆவியை ''உள்ளான மனுஷன்'' என்று குறிப்பிடுகிறார். மானிட ஆவி என்பது ஒரு கருத்தோ அல்லது ஆவியோ அல்ல அது ஒரு நபர் என்ற தனது நம்பிக்கையை அவர் இப்படி வெளிப்படுத்துகிறார்.

> ஆனபடியினாலே நாங்கள் சோர்ந்துபோகிறதில்லை; எங்கள் *புறம்பான மனுஷனானது* அழிந்தும், *உள்ளான மனுஷனானது* நாளுக்குநாள் புதிதாக்கப்படுகிறது (2 கொரி. 4:16 அழுத்தம் கொடுக்கப்பட்டுள்ளது).

''புறம்பான மனுஷன்'' என்பது சரீரத்தைக் குறிக்கிறது, ''உள்ளான மனுஷன்'' என்பது ஆவியைக் குறிக்கிறது. சரீரமானது வயதுமுதிர்ந்தாலும், ஆவி வயதாவதில்லை, ஏனென்றால் அது நித்தியமானது.

பவுல் சரீரத்தையும் ஆவியையும் *மனுஷன்* என்று குறிப்பிடுவதைக் கவனியுங்கள். எனவே உங்கள் ஆவியை நீங்கள் கற்பனைசெய்து பார்க்கும்போது, ஒரு ஆவிக்குரிய மேகத்தைக் கற்பனை செய்யாதீர்கள். உங்களைப்போன்ற வடிவில் இருக்கும் ஒரு *நபரைக்* கற்பனைசெய்து பார்ப்பதே சரியாகும். ஆனால் உங்கள் சரீரம் வயது முதிர்ந்ததாக இருக்குமானால், உங்கள் ஆவியும் வயதுமுதிர்ந்ததாக இருக்கும் என்று கற்பனைசெய்துகொள்ளாதீர்கள். ஏனென்றால் ஆவி முதிர்வடைவதில்லை. அது ஒவ்வொரு நாளும் புதுப்பிக்கப்பட்டு வருகிறது.

உங்கள் ஆவி என்ற பகுதியே மறுபடியும் பிறக்கிறது (நீங்கள் ஆண்டவராகிய இயேசுவை விசுவாசிப்பீர்களானால்). உங்கள் ஆவி தேவ ஆவியானவரோடு இணைக்கப்படுகிறது (பார்க்க, 1 கொரி. 6:17). நீங்கள் இயேசுவைப் பின்பற்றும்போது, அவரே உங்களை வழிநடத்து கிறார் (பார்க்க, ரோமர் 10:14).





தேவனும் ஆவியாக இருக்கிறார் என்று வேதாகமம் போதிக்கிறது (பார்க்க, யோவான் 4:24). தூதர்களும் பிசாசுகளும்கூட ஆவிகளாகவே இருக்கிறார்கள். அவர்கள் எல்லோருமே வடிவங்களைக் கொண்டிருக் கிறார்கள். எல்லோருமே ஆவிக்குரிய உலகத்தில் வாசம்பண்ணு கிறார்கள். ஆனால் நமது சரீரப்பிரகாரமான உணர்வுகளைக்கொண்டு ஆவிக்குரிய உலகத்தைக் கண்டறிய முடியாது. நமது சரீரப்பிரகாரமான உணர்வுகளைக் கொண்டு ஆவிக்குரிய உலகத்தைத் தொடர்புகொள்ள முயலுவது என்பது, தமது கைகளைக் கொண்டு வானொலி அலை களைப் பிடிக்க முயலுவது போன்றதாகும். ஒரு அறைக்குள்ளாக வானொலி அலைகள் சென்றுகொண்டிருப்பதை நமது சரீரப்பிரகாரமான உணர்வுகளைக் கொண்டு நம்மால் கண்டறிய முடியாது. அதற்காக வானொலி அலைகள் இல்லை என்பதை நிரூபிக்க முடியாது. ஒரு வானொலிப் பெட்டியின் மூலமாகவே வானொலி அலைகளைக் கிரகிக்க முடியும்.

ஆவிக்குரிய உலகத்திலும் இதுவே உண்மையாகும். சரீர உணர்வுகளைக் கொண்டு நம்மால் ஆவிக்குரிய உலகத்தைக் கண்டறிய முடியவில்லை என்பதற்காக அப்படியொரு ஆவிக்குரிய உலகம் இல்லை என்று சொல்லிவிட முடியாது. அது இருக்கிறது, மக்கள் ஆவிக்குரிய ஜீவிகளாக இருக்கிறபடியால், அவர்கள் அதை உணர்ந்தாலும் சரி உணராவிட்டாலும் சரி அவர்கள் ஆவிக்குரிய உலகத்தில் இருக்கிறார்கள். அவர்கள் ஆவிக்குரியபிரகாரமாக சாத்தானோடு தொடர்புகொண்டிருக்கிறார்கள் (அவர்கள் மனந்திரும்பா விட்டால்) அல்லது தேவனோடு ஆவிக்குரிய பிரகாரமாகத் தொடர்பு கொண்டிருக்கிறார்கள் (அவர்கள் மறுபடியும் பிறந்திருப்பார்களானால்). ஆவிகளோடு தொடர்புகொள்ளும் சிலர் தங்கள் ஆவியின் மூலமாக அதைச் செய்கிறார்கள். ஆனால் அவர்கள் சாத்தானின் அந்தகார ராஜ்யத்தையே தொடர்புகொள்ளுகிறார்கள்.

### நித்திய சரீரங்கள்

இப்போது நமது சரீரத்தைக் குறித்த ஒரு காரியத்தைப் பார்ப்போம். அவை இறுதியில் மரித்துப்போனாலும், நமது சரீரப்பிரகாரமான மரணம் நிரந்தரமானது அல்ல. ஒரு நாளில் தேவன்தாமே மரித்த எல்லா சரீரத்தையும் உயிரோடு எழுப்புவார். இயேசுவானவர் இவ்வாறு சொல்லி யிருக்கிறார்:

> இதைக் குறித்து நீங்கள் ஆச்சரியப்பட வேண்டாம்; ஏனென்றால் பிரேதக் குழிகளிலுள்ள அனைவரும் அவருடைய சத்தத்தைக் கேட்குங்காலம் வரும்; அப்பொழுது, நன்மைசெய்தவர்கள் ஜீவனை அடையும் படி எழுந்திருக்கிறவர்களாகவும், தீமை செய்கிறவர்கள்

ஆக்கினையை அடையும்படி எழுந்திருக்கிறவர் களாகவும் புறப்படுவார்கள் [யோவான் 5:28—29].

அப்போஸ்தலனாகிய யோவான் தனது வெளிப்படுத்தல் நூலில் நீதிமான்களின் உயிர்த்தெழுதலுக்குப் பிறகு குறைந்தபட்சம் ஆயிரம் ஆண்டுகள் கழித்து அநீதியுள்ளவர்களின் சரீரங்கள் எழுப்பப்படும் என்று சொல்லியிருக்கிறார்:

அவர்கள் [உபத்திரவகாலத்தில் இரத்தச்சாட்சிகளாக மரித்த பரிசுத்தவான்கள்] உயிர்த்து கிறிஸ்துவுட னேகூட ஆயிரம் வருஷம் அரசாண்டார்கள். மரண மடைந்த மற்றவர்கள் அந்த ஆயிரம் வருஷம் முடியு மளவும் உயிரடையவில்லை. இதுவே முதலாம் உயிர்த் தெழுதல்.[46] முதலாம் உயிர்த்தெழுதலுக்குப் பங்குள்ள வன் பாக்கியவானும் பரிசுத்தவானுமாயிருக்கிறான்; இவர்கள்மேல் இரண்டாம் மரணத்திற்கு அதிகார மில்லை; இவர்கள் தேவனுக்கும் கிறிஸ்துவுக்கும் முன்பாக ஆசாரியராயிருந்து, அவரோடேகூட ஆயிரம் வருஷம் அரசாளுவார்கள் [வெளி 20:4ஆ —6].

சபையை எடுத்துக்கொள்ளும்படி இயேசுவானவர் திரும்பி வரும்போது, நீதிமான்களின் மரித்த சரீரங்கள் உயிரோடு எழுப்பப்பட்டு, அவர்களுடைய ஆவியோடு சேர்ந்து, இயேசுவோடுகூட வானத்தில் காணப்படும் என்று வேதாகமம் சொல்லுகிறது.

இயேசுவானவர் மரித்துப் பின்பு எழுந்திருந்தாரென்று விசுவாசிக்கிறோமே; அப்படியே இயேசுவுக்குள் நித்திரையடைந்தவர்களையும் தேவன் அவரோடே கூடக் கொண்டுவருவார். கர்த்தருடைய வார்த்தையை முன்னிட்டு நாங்கள் உங்களுக்குச் சொல்லுகிறதாவது: கர்த்தருடைய வருகைமட்டும் உயிரோடிருக்கும் நாம் நித்திரையடைந்தவர்களுக்கு முந்திக்கொள்வதில்லை. ஏனெனில், கர்த்தர்தாமே ஆரவாரத்தோடும், பிரதான தூதனுடைய சத்தத்தோடும், தேவ எக்காளத்தோடும் வானத்திலிருந்து இறங்கிவருவார்; அப்பொழுது

[46] ‘‘இதுவே *முதலாம்* உயிர்த்தெழுதல்’’ என்று யோவான் சொல்லுகிறபடியால், இதற்கு முன்பாக மொத்தமாக உயிரோடு எழுப்பப்பட்டது கிடையாது என்று நம்மை நம்பும்படி செய்கிறது. இது உலகளாவிய உபத்திரவகாலத்தின் முடிவில் இயேசு வரும்போது நடைபெறுகிறபடியால், இது உபத்திரவகாலத்துக்கு முன்பாகச் சபை எடுத்துக்கொள்ளப்படும் என்ற கருத்துக்கு முரண்பாடாக இருக்கிறது. ஏனென்றால், 1 தெசலோனிக்கேயர் 4:13—17 வசனங்களின்படி இயேசு சபையை எடுத்துக்கொள்ளும்படி வரும்போது, பலர் மொத்தமாக உயிரோடு எழுப்பப்படுவார்கள் என்பதை நாம் அறிகிறோம்.





கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் முதலாவது எழுந்திருப்பார்கள். பின்பு, உயிரோடிருக்கும் நாமும் கர்த்தருக்கு எதிர்கொண்டுபோக, மேகங்கள்மேல் அவர்களோடேகூட ஆகாயத்தில் எடுத்துக்கொள்ளப் பட்டு, இவ்விதமாய் எப்பொழுதும் கர்த்தருடனேகூட இருப்போம் [1 தெச. 4:14—17].

தேவன் ஆதி மனிதனை மண்ணிலிருந்து உருவாக்கினார். ஒவ்வொரு நபரிலுள்ள அம்சங்களையும் எடுத்து, அதே பொருட்களைக் கொண்டு புதிய சரீரங்களாக உருவாக்க அவருக்குச் சிரமமிருக்காது.

நமது சரீர உயிர்த்தெழுதலைக் குறித்துப் பவுல் இவ்வாறு எழுதி யிருக்கிறார்:

மரித்தோரின் உயிர்த்தெழுதலும் அப்படியே இருக்கும்; அழிவுள்ளதாய் விதைக்கப்படும், அழிவில்லாததாய் எழுந்திருக்கும்; கனவீனமுள்ளதாய் விதைக்கப்படும், மகிமையுள்ளதாய் எழுந்திருக்கும்; பலவீனமுள்ளதாய் விதைக்கப்படும், பலமுள்ளதாய் எழுந்திருக்கும். ஜென்மசரீரம் விதைக்கப்படும், ஆவிக்குரிய சரீரம் எழுந்திருக்கும்... சகோதரரே, நான் சொல்லுகிற தென்னவெனில், மாம்சமும் இரத்தமும் தேவனுடைய ராஜ்யத்தைச் சுதந்தரிக்க மாட்டாது; அழிவுள்ளது அழியாமையைச் சுதந்தரிப்பதுமில்லை. இதோ, ஒரு இரகசியத்தை உங்களுக்கு அறிவிக்கிறேன்; நாமெல்லாரும் நித்திரையடைவதில்லை; ஆகிலும் கடைசி எக்காளம் தொனிக்கும்போது, ஒரு நிமிஷத்திலே, ஒரு இமைப்பொழுதிலே, நாமெல் லாரும் மறுரூபமாக்கப்படுவோம். எக்காளம் தொனிக் கும், அப்பொழுது மரித்தோர் அழிவில்லாதவர்களாய் எழுந்திருப்பார்கள்; நாமும் மறுரூபமாக்கப்படுவோம். அழிவுள்ளதாகிய இது அழியாமையையும், சாவுக் கேதுவாகிய இது சாவாமையையும் தரித்துக் கொள்ள வேண்டும் [1 கொரி. 15:42—44அ, 50—53].

நமது புதிய சரீரங்களின் அற்புதமான பண்பு அவை நித்திய மானவையாகவும், அழியாதவையாகவும் இருக்கும் என்பதைக் கவனியுங்கள். அவை முதிர்வடையாது, நோய்வாய்ப்படாது அல்லது மரிக்காது! நமது புதிய சரீரங்கள் இயேசுவானவர் உயிர்த்தெழுந்தபோது பெற்ற புதிய சரீரத்துக்கு ஒப்பாக இருக்கும்:

நம்முடைய குடியிருப்போ பரலோகத்திலிருக்கிறது, அங்கேயிருந்து கர்த்தராகிய இயேசுகிறிஸ்து என்னும்

> இரட்சகர் வர எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறோம். அவர் எல்லாவற்றையும் தமக்குக் கீழ்ப்படுத்திக்கொள்ளத்தக்க தம்முடைய வல்லமையான செயலின்படியே, *நம்முடைய அற்பமான சரீரத்தைத் தம்முடைய மகிமையான சரீரத்திற்கு ஒப்பாக மறுரூபப்படுத்துவார்* [பிலி. 3:20–21அழுத்தம் கொடுக்கப்பட்டுள்ளது].

அப்போஸ்தலனாகிய யோவானும் இந்த அற்புதமான சத்தியத்தை உறுதிப்படுத்துகிறார்:

> பிரியமானவர்களே, இப்பொழுது தேவனுடைய பிள்ளைகளாயிருக்கிறோம், இனி எவ்விதமாயிருப் போமென்று இன்னும் வெளிப்படவில்லை; ஆகிலும் *அவர் வெளிப்படும்போது* அவர் இருக்கிறவண்ண மாகவே நாம் அவரைத் தரிசிப்பதினால், *அவருக்கு ஒப்பாயிருப்போமென்று* அறிந்திருக்கிறோம் [1 யோவான் 3:2 அழுத்தம் கொடுக்கப்பட்டுள்ளது].

இதை நமது மனதில் முழுமையாகப் புரிந்துகொள்ள முடியாவிட்டாலும், இதை விசுவாசித்து, வரவிருப்பவைகளுக்காகக் களிகூர முடியும். [47]

## புதிய பிறப்பைக் குறித்து இயேசுவானவர்

ஒருமுறை இயேசுவானவர் நிக்கொதேமு என்ற யூதத் தலைவனிடம் பரிசுத்த ஆவியானவரின் கிரியையின் மூலமாக மனித ஆவி மறுபடியும் பிறக்க வேண்டியதின் அவசியத்தை வலியுறுத்தியிருக் கிறார்:

> இயேசு அவனுக்குப் பிரதியுத்தரமாக: ஒருவன் மறுபடியும் பிறவாவிட்டால் தேவனுடைய ராஜ்யத்தைக் காண மாட்டான் என்று மெய்யாகவே மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன் என்றார். அதற்கு நிக்கொதேமு: ஒரு மனுஷன் முதிர்வயதாயிருக் கையில் எப்படிப் பிறப்பான்? அவன் தன் தாயின் கர்ப்பத்தில் இரண்டாந்தரம் பிரவேசித்துப் பிறக்கக் கூடுமோ என்றான். இயேசு பிரதியுத்தரமாக: ஒருவன் ஜலத்தினாலும் ஆவியினாலும் பிறவாவிட்டால் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்க மாட்டான் என்று மெய்யாகவே மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன்.

[47] உயிர்த்தெழுதலைக் குறித்து மேலும் ஆய்வுசெய்ய வேண்டுமானால், பார்க்க, தானி. 12:1–2; யோவான் 11:23–26; அப். 24:14–15; 1 கொரி. 15:1–57.





> மாம்சத்தினால் பிறப்பது மாம்சமாயிருக்கும், ஆவி யினால் பிறப்பது ஆவியாயிருக்கும். நீங்கள் மறுபடியும் பிறக்க வேண்டும் என்று நான் உங்களுக்குச் சொன்னதைக் குறித்து அதிசயப்பட வேண்டாம் [யோவான் 3:3–7].

ஒருவன் பரலோக ராஜ்யத்துக்குள் பிரவேசிக்க வேண்டுமானால் மறுபடியும் பிறக்க வேண்டும் என்று இயேசுவானவர் சொல்லியபோது, நிக்கொதேமு சரீரப்பிரகாரமான பிறப்பைக் குறித்தே முதலில் நினைத்தான். ஆனால் தான் ஆவிக்குரிய புதிய பிறப்பைப் பற்றிக் கூறுவதை இயேசுவானவர் தெளிவுபடுத்தினார். அதாவது, ஒரு நபரின் ஆவி மறுபடியும் பிறக்க வேண்டும்.

நமது ஆவி தீய, பாவகரமான இயல்பினால் கறைப்பட்டிருக்கிற படியினால்தான் நமக்கு ஆவிக்குரிய புதிய பிறப்பு தேவைப்படுகிறது. பாவகரமான இயல்பு வேதாகமத்தில் அடிக்கடி *மரணம்* என்று குறிப்பிடப் படுகிறது. இதற்கும் சரீரப்பிரகாரமான மரணத்துக்கும் [சரீரம் செயல் படுவது நின்றுபோவது] இடையே வேறுபடுத்திக் காண்பதற்காக நாம் இந்தத் தீய இயல்பை *ஆவிக்குரிய மரணம்* என்று அழைப்போம்.

## ஆவிக்குரிய மரணத்துக்கு விளக்கம்

ஆவிக்குரிய பிரகாரமாக மரித்துப்போவது என்றால் என்ன என்று பவுல் எபேசியர் 2:1–3 வசனங்களில் விவரித்திருக்கிறார்:

> அக்கிரமங்களினாலும் பாவங்களினாலும் *மரித்தவர்* களாயிருந்த உங்களை உயிர்ப்பித்தார். அவைகளில் நீங்கள் முற்காலத்திலே இவ்வுலக வழக்கத்திற் கேற்றபடியாகவும், கீழ்ப்படியாமையின் பிள்ளை களிடத்தில் இப்பொழுது கிரியைசெய்கிற ஆகாயத்து அதிகாரப் பிரபுவாகிய ஆவிக்கேற்றபடியாகவும் நடந்துகொண்டீர்கள். அவர்களுக்குள்ளே நாமெல் லாரும் முற்காலத்திலே நமது மாம்ச இச்சையின்படியே நடந்து, நமது மாம்சமும் மனம் விரும்பினவைகளைச் செய்து, சுபாவத்தினாலே மற்றவர்களைப் போலக் கோபாக்கினையின் பிள்ளைகளாயிருந்தோம் [அழுத்தம் கொடுக்கப்பட்டுள்ளது].

பவுல் சரீரப்பிரகாரமாக உயிரோடிருக்கிறவர்களுக்கு இந்த வார்த்தைகளை எழுதியபடியால், அவர் சரீரப்பிரகாரமான மரணத்தைக் குறிப்பிடவில்லை என்பது தெளிவாகத் தெரிகிறது. என்றாலும் அவர்கள் முன்பு ‘‘அக்கிரமங்களினாலும் பாவங்களினாலும் *மரித்தவர்*களாயிருந் தார்கள்’’ என்று அவர் சொல்லியிருக்கிறார். பாவமே ஆவிக்குரிய மரணத்துக்கான கதவைத் திறந்துகொடுக்கிறது [பார்க்க, ரோமர் 5:12].

ஆவிக்குரியபிரகாரமாக மரித்திருப்பது என்றால் உங்கள் ஆவியில் பாவகரமான இயல்பைக் கொண்டிருப்பதாகும். அவர்கள் ''*சுபாவத்தினாலே...* கோபாக்கினையின் பிள்ளைகள்'' என்று பவுல் குறிப்பிடுவதைப் பாருங்கள்.

மேலும், ஆவிக்குரிய மரணம் என்பது சாத்தானின் இயல்பைத் தங்கள் ஆவியில் பெற்றிருப்பதாகும். ஆவிக்குரிய பிரகாரமாக மரித்தவர்கள் ''இப்பிரபஞ்சத்தின் அந்தகாரலோகாதிபதியின்'' ஆவியைப் பெற்றிருப்பதாகப் பவுல் எழுதியிருக்கிறார். இந்த ''இப்பிரபஞ்சத்தின் அந்தகாரலோகாதிபதி'' சாத்தானே என்பதில் எந்தவிதச் சந்தேகமும் இல்லை [பார்க்க, எபே. 6:12]. இரட்சிக்கப்படாத எல்லோரிலும் அவனுடைய ஆவி கிரியைசெய்துகொண்டிருக்கிறது.

மறுபடியும் பிறவாத யூதர்களைக் குறித்துப் பேசியபோது, இயேசு இப்படிக் குறிப்பிட்டிருக்கிறார்:

> நீங்கள் உங்கள் பிதாவாகிய பிசாசானவனால் உண்டானவர்கள்; உங்கள் பிதாவினுடைய இச்சைகளின்படி செய்ய மனதாயிருக்கிறீர்கள்; அவன் ஆதிமுதற்கொண்டு மனுஷகொலைபாதகனாயிருக்கிறான்; சத்தியம் அவனிடத்திலில்லாதபடியால் அவன் சத்தியத்திலே நிலைநிற்கவில்லை; அவன் பொய்யனும் பொய்க்குப் பிதாவுமாயிருக்கிறபடியால் அவன் பொய் பேசும்போது தன் சொந்தத்தில் எடுத்துப் பேசுகிறான் [யோவான் 8:44].

ஆவிக்குரியபிரகாரமாகப் பார்க்கும்போது, மறுபடியும் பிறவாதவர்கள் சாத்தானின் இயல்பைத் தங்கள் ஆவிகளில் பெற்றிருப்பது மட்டுமின்றி, சாத்தான் அவர்களுக்கு ஆவிக்குரிய பிதாவாகவும் இருக்கிறான். அவர்கள் இயல்பாகவே பிசாசைப்போல நடந்து கொள்ளுகிறார்கள். அவர்கள் கொலைபாதகர்களாகவும், பொய்யர்களாகவும் இருக்கிறார்கள்.

இரட்சிக்கப்படாதவர்கள் எல்லோரும் கொலைபாதகம் செய்திராவிட்டாலும், அவர்களும் கொலைகாரர்களைப்போல விரோதத்தினால் தூண்டிவிடப்படுகிறார்கள். தப்பிச்செல்ல முடியுமானால் அவர்கள் கொலை செய்வார்கள். பல நாடுகளில் கருச்சிதைவைச் சட்டபூர்வமாக்கியது இதையேதான் காட்டுகிறது. இரட்சிக்கப்படாத மக்கள் தங்கள் பிறக்காத சிசுக்களையும்கூடக் கொலைசெய்வார்கள்.

எனவேதான் ஒருவர் ஆவிக்குரிய மறுபிறப்பை அனுபவிக்க வேண்டும். அப்படிச் செய்யும்போது, சாத்தானின் பாவகரமான இயல்பு அவருடைய ஆவியிலிருந்து அகற்றப்பட்டு, அது தேவனுடைய பரிசுத்த இயல்பினால் நிரப்பப்படுகிறது. தேவனுடைய பரிசுத்த





ஆவியானவர் அவருடைய ஆவிக்குள் வந்து வாசம்பண்ணுகிறார். அவர் இனிமேலும் ''ஆவிக்குரியபிரகாரமாக மரித்தவராக'' இருப்பதில்லை. அவர் ''ஆவிக்குரிய பிரகாரமாக உயிர்த்தவராக'' ஆகிறார். அவருடைய ஆவி இனிமேலும் மரித்ததாக இராமல், தேவனுக்குள் உயிர்த்திருக்கிறது. அவர் சாத்தானின் ஆவிக்குரிய பிள்ளையாக இராமல், தேவனுடைய ஆவிக்குரிய பிள்ளையாக மாறியிருக்கிறார்.

### மறுமலர்ச்சி என்பது மறுபடியும் பிறப்பதற்கு மாற்றானது அல்ல

இரட்சிக்கப்படாத மக்கள் ஆவிக்குரிய பிரகாரமாக மரித்தவர்களாக இருக்கிறபடியால் அவர்கள் எவ்வளவுதான் முயன்றாலும் சுய மறுமலர்ச்சியின்மூலமாக இரட்சிக்கப்பட முடியாது. இரட்சிக்கப்படாத மக்களுக்குப் புதிய வெளியரங்கமான செயல்கள் அல்ல, புதிய இயல்பு தேவைப்படுகிறது. நீங்கள் ஒரு பன்றியைப் பிடித்து, அதைக் குளிப்பாட்டி, அதன்மீது வாசனைத் திரவியத்தைத் தெளித்து, ஒரு சிவப்பு ரிப்பனை அதன் கழுத்தைச் சுற்றிக் கட்டினாலும், அது கழுவப்பட்ட பன்றியாகவே இருக்கும்! அதனுடைய சுபாவம் அல்லது இயல்பு மாறாது. சகதியைக் கண்டால் அடுத்த கணம் அது பாய்ந்து அதில் குதித்துவிடும்.

மறுபடியும் பிறக்காத சமயப்பிரகாரமான மக்களும் இப்படித்தான் இருக்கிறார்கள். வெளியே அவர்கள் ஓரளவு தங்களைச் சுத்தப்படுத்தியிருக்கலாம். ஆனால் உள்ளுக்குள் அவர்கள் எப்போதும்போல அசுத்தமானவர்களாகவே இருக்கிறார்கள். தமது நாட்களில் சமயச்சார்புடையவர்களாக இருந்தவர்களிடம் இயேசுவானவர் இப்படிக் கூறினார்:

> மாயக்காரராகிய வேதபாரகரே! பரிசேயரே! உங்களுக்கு ஐயோ, போஜன பானபாத்திரங்களின் வெளிப்புறத்தைச் சுத்தமாக்குகிறீர்கள்; உட்புறத்திலோ அவைகள் கொள்ளையினாலும் அநீதத்தினாலும் நிறைந்திருக்கிறது. குருடனான பரிசேயனே! போஜன பானபாத்திரங்களின் வெளிப்புறம் சுத்தமாகும்படி அவைகளின் உட்புறத்தை முதலாவது சுத்தமாக்கு. மாயக்காரராகிய வேதபாரகரே! பரிசேயரே! உங்களுக்கு ஐயோ, வெள்ளையடிக்கப்பட்ட கல்லறைகளுக்கு ஒப்பாயிருக்கிறீர்கள், அவைகள் புறம்பே அலங்காரமாய்க் காணப்படும், உள்ளேயோ மரித்தவர்களின் எலும்புகளினாலும் சகல அசுத்தத்தினாலும் நிறைந்திருக்கும். அப்படியே நீங்களும் மனுஷருக்கு நீதிமான்கள் என்று புறம்பே காணப்படுகிறீர்கள்; உள்ளத்திலோ மாயத்தினாலும் அக்கிரமத்தினாலும் நிறைந்திருக்கிறீர்கள் [மத். 23:25–28].

சமயப்பிரகாரமானவர்களாக இருந்தாலும், ஒருபோதும் பரிசுத்த ஆவியானவரின் புதிய பிறப்பை அனுபவிக்காதவர்களை இயேசுவானவர் மிகச் சரியாக விவரித்திருக்கிறார். மறுபடியும் பிறப்பது மக்களை வெளியில் மட்டுமல்ல, உள்ளுக்குள்ளும் சுத்திகரிக்கிறது.

### ஆவி மறுபடியும் பிறக்கும்போது ஆத்துமாவுக்கு என்ன நேரிடுகிறது?

ஒரு நபரின் ஆவி மறுபடியும் பிறக்கும்போது, அவருடைய ஆத்துமா துவக்கத்தில் பாதிக்கப்படாமலே இருக்கிறது [இயேசுவைப் பின்பற்றும்படி அவர் தனது மனதில் தீர்மானம் எடுத்திருக்கிறார் என்பதைத் தவிர]. ஆனால் நாம் தேவனுடைய பிள்ளைகளாகும்போது நமது ஆத்துமாவைக் கொண்டு ஒன்றைச் செய்ய வேண்டுமென்று அவர் வாஞ்சிக்கிறார். நாம் எப்படிச் சிந்திக்க வேண்டுமென்று தேவன் விரும்புகிறாரோ அப்படியே நாம் சிந்திக்கும்படி, நமது ஆத்துமாவை [மனதை] தேவனுடைய வார்த்தையினாலே புதிதாக்க வேண்டும். நமது மனம் புதுப்பிக்கப்படுகிறதினால் தொடர்ந்து நமது வாழ்க்கையில் வெளியரங்கமான மாற்றம் ஏற்படுகிறது. நாம் இன்னுமதிகமாக இயேசுவைப் போலாகும்படி வளர்ச்சி பெறுகிறோம்:

> நீங்கள் இந்தப் பிரபஞ்சத்திற்கு ஒத்த வேஷந்தரியாமல், தேவனுடைய நன்மையும் பிரியமும் பரிபூரணமுமான சித்தம் இன்னதென்று பகுத்தறியத்தக்கதாக, *உங்கள் மனம் புதிதாகிறதினாலே மறுரூபமாகுங்கள்* [ரோமர் 12:2 அழுத்தம் கொடுக்கப்பட்டுள்ளது].

விசுவாசியின் வாழ்க்கையில் இந்தச் செயல்முறையைக் குறித்து யாக்கோபும் எழுதியிருக்கிறார்:

> உங்கள் உள்ளத்தில் நாட்டப்பட்டதாயும் உங்கள் ஆத்துமாக்களை இரட்சிக்க வல்லமையுள்ளதாயுமிருக்கிற வசனத்தைச் சாந்தமாய் ஏற்றுக்கொள்ளுங்கள் [யாக். 1:21ஆ].

யாக்கோபு ஏற்கெனவே தங்கள் ஆவிகளில் மறுபடியும் பிறந்த கிறிஸ்தவர்களுக்கு இந்த வார்த்தைகளை எழுதுகிறார் என்பதைக் கவனியுங்கள். அவர்களுடைய ஆத்துமாக்களும் இரட்சிக்கப்பட வேண்டியிருக்கிறது. ''உள்ளத்தில் நாட்டப்பட்ட'' வசனத்தை அவர்கள் சாந்தமாக ஏற்றுக்கொள்ளும்போதுதான் இது நடக்க முடியும். எனவேதான் நாம் புதிய விசுவாசிகளுக்குத் தேவனுடைய வார்த்தையைப் போதிக்க வேண்டியிருக்கிறது.

### பழைய இயல்பு பின்தங்கியிருத்தல்

மறுபடியும் பிறந்த பிறகு கிறிஸ்தவர்கள் தாங்கள் இரட்டை இயல்புடையவர்களாக இருப்பதைக் காண்கிறார்கள். பவுல் இதை





ஆவிக்கும் மாம்சத்துக்கும் இடையில் நடக்கும் யுத்தம் என்று குறிப்பிடுகிறார்.

> மாம்சம் ஆவிக்கு விரோதமாகவும், ஆவி மாம்சத்துக்கு விரோதமாகவும் இச்சிக்கிறது; நீங்கள் செய்ய வேண்டுமென்றிருக்கிறவைகளைச் செய்யாதபடிக்கு, இவைகள் ஒன்றுக்கொன்று விரோதமாயிருக்கிறது [கலா. 5:17].

பின்தங்கியிருக்கும் பழைய இயல்பைப் பவுல் ''மாம்சம்'' என்று குறிப்பிடுகிறார். நமக்குள் தங்கியிருக்கும் இந்த இரண்டு இயல்புகளும் வெவ்வேறான இச்சைகளை உண்டாக்குகின்றன. அவைகளுக்கு நாம் இடம்கொடுப்போமானால் அவை வெவ்வேறான செயல்களையும், வாழ்க்கை முறைகளையும் உண்டாக்குகின்றன. ''மாம்சத்தின் கிரியைகளுக்கும்'' ''ஆவியின் கனிக்கும்'' இடையேயுள்ள முரண்பாட்டைப் பவுல் சுட்டிக்காட்டுவதைக் கவனியுங்கள்:

> மாம்சத்தின் கிரியைகள் வெளியரங்கமாயிருக்கின்றன; அவையாவன: விபசாரம், வேசித்தனம், அசுத்தம், காமவிகாரம், விக்கிரகாராதனை, பில்லிசூனியம், பகைகள், விரோதங்கள், வைராக்கியங்கள், கோபங்கள், சண்டைகள், பிரிவினைகள், மார்க்கபேதங்கள், பொறாமைகள், கொலைகள், வெறிகள், களியாட்டுகள் முதலானவைகளே; இப்படிப்பட்டவைகளைச் செய்கிறவர்கள் தேவனுடைய ராஜ்யத்தைச் சுதந்தரிப்பதில்லையென்று முன்னே நான் சொன்னது போல இப்பொழுதும் உங்களுக்குச் சொல்லுகிறேன். ஆவியின் கனியோ, அன்பு, சந்தோஷம், சமாதானம், நீடிய பொறுமை, தயவு, நற்குணம், விசுவாசம், சாந்தம், இச்சையடக்கம்; இப்படிப்பட்டவைகளுக்கு விரோதமான பிரமாணம் ஒன்றுமில்லை [கலா. 5:19–23].

கிறிஸ்தவர்களும்கூட மாம்சத்துக்கு இடம்கொடுக்க முடியும் என்பது தெளிவாகத் தெரிகிறது. இல்லாவிட்டால், இப்படிச் செய்கிறவர்கள் தேவனுடைய ராஜ்யத்தைச் சுதந்தரிப்பதில்லை என்று அவர் சொல்லியிருக்க மாட்டார். ரோமருக்கு எழுதிய நிருபத்திலும் பவுல் ஒவ்வொரு கிறிஸ்தவனிலும் காணப்படும் இந்த இரண்டு இயல்புகளைக்குறித்து எழுதி, மாம்சத்துக்கு இடம்கொடுப்பதின் பின்விளைவுகளைக் குறித்து எச்சரிக்கிறார்:

> மேலும் கிறிஸ்து உங்களிலிருந்தால் சரீரமானது பாவத்தினிமித்தம் மரித்ததாயும், ஆவியானது நீதியினிமித்தம் ஜீவனுள்ளதாயும் இருக்கும்... ஆகையால்

சகோதரரே, மாம்சத்தின்படி பிழைப்பதற்கு நாம் மாம்சத்துக்குக் கடனாளிகளல்ல. *மாம்சத்தின்படி பிழைத்தால் சாவீர்கள்;* ஆவியினாலே சரீரத்தின் செய்கைகளை அழித்தால் பிழைப்பீர்கள். மேலும் எவர்கள் தேவனுடைய ஆவியினாலே நடத்தப்படு கிறார்களோ, அவர்கள் தேவனுடைய புத்திரராயிருக் கிறார்கள் [ரோமர் 8:10, 12—14 அழுத்தம் கொடுக்கப் பட்டுள்ளது].

இது கிறிஸ்தவர்களுக்குக் கொடுக்கப்பட்ட தெளிவான எச்சரிப்பாகும். மாம்சத்தின்படி ஜீவித்தல் [இது ஒழுங்கான பழக்கமாகக் கொள்ளுதலைக் குறிக்கிறது] மரணத்தை விளைவிக்கிறது. பவுல் ஆவிக்குரிய மரணத்தைக் குறித்தே எச்சரித்திருக்க வேண்டும். ஏனென்றால் எல்லோரும் இறுதியில் சரீரப்பிரகாரமாக மரித்துப் போகிறார்கள். சரீரத்தின் கிரியைகளை மரணத்துக்குள்ளாக்கிய கிறிஸ்தவர்களும்கூட இறுதியில் சரீரப்பிரகாரமாக மரித்துப்போவார்கள்.

ஒரு கிறிஸ்தவன் பவுல் பட்டியலிட்டுள்ள பாவங்களில் ஒன்றில் *தாற்காலிகமாக* விழுந்துபோகலாம். ஆனால் ஒரு விசுவாசி பாவம் செய்யும்போது, அவன் பாவத்தைக் குறித்து உணர்த்தப்பட்டு, மனந்திரும்பலாம். தனது பாவத்தை அறிக்கையிட்டு, தேவனுடைய மன்னிப்பை வேண்டிக்கொள்ளுபவர்கள் சுத்திகரிக்கப்படுவார்கள் [பார்க்க, 1 யோவான் 1:9].

ஒரு கிறிஸ்தவன் பாவம் செய்யும்போது, அது அவன் தேவனோடு தனது *உறவை* முறித்துக்கொண்டதாக ஆகிவிடாது. அவன் தனது *ஐக்கியத்தை* முறித்துக்கொள்ளுகிறான். அவன் இப்போதும் தேவனுடைய பிள்ளையாக இருந்தாலும், தேவனுடைய கீழ்ப்படியாத பிள்ளையாக இருக்கிறான். விசுவாசி தனது பாவத்தை அறிக்கையிடா விட்டால் அவன் தேவனால் சிட்சிக்கப்படும் நிலையில் இருக்கிறான்.

## யுத்தம்

தவறு என்று நீங்கள் அறிந்த காரியங்களைச் செய்யும்படி நீங்கள் விரும்பினால் நீங்கள் ‘‘மாம்சத்தின் இச்சையை’’ அனுபவித்திருக் கிறீர்கள். இதே வேளையில் நீங்கள் தவறு செய்யும்படி மாம்சத்தில் சோதிக்கப்படும்போது, உங்களுக்குள் ஏதோ ஒன்று அந்தச் சோதனையை எதிர்த்து நிற்பதையும் நீங்கள் கண்டிருப்பீர்கள். இதுவே ‘‘ஆவியின் விருப்பமாகும்.’’ நீங்கள் சோதனைக்கு விட்டுக் கொடுப்பீர் களானால், உள்ளுக்குள் பாவத்தைக் குறித்து உணர்த்தப்படுகிறீர்கள். உங்களுடைய ஆவியின் குரல் பேசுவதை நீங்கள் கேட்கிறீர்கள். இதையே நாம் ‘‘மனச்சாட்சி’’ என்று குறிப்பிடுகிறோம்.





நமது மாம்சீகமான இச்சைகள் தவறு செய்யும்படி நம்மைத் தூண்டும் என்று தேவன் நன்றாக அறிந்திருக்கிறார். ஆனால் இது மாம்சத்தின் இச்சைக்கு இடம் கொடுத்திருப்பதை நியாயப்படுத்தும் ஒரு சாக்குப்போக்கு அல்ல. நாம் கீழ்ப்படிதலிலும் பரிசுத்தத்திலும் செயல் பட்டு, மாம்சத்தின் இயல்பை வெற்றிகொள்ள வேண்டும் என்றே தேவன் விரும்புகிறார்.

பின்னும் நான் சொல்லுகிறதென்னவென்றால், ஆவிக் கேற்றபடி நடந்துகொள்ளுங்கள், அப்பொழுது மாம்ச இச்சையை நிறைவேற்றாதிருப்பீர்கள் [கலா. 5:16].

மாம்சத்தை வெற்றிகொள்ளுவதற்கு எந்தத் தந்திரமான சூத்திரமும் கிடையாது. நாம் ஆவிக்கேற்றபடி நடந்துகொண்டால், மாம்சத்தின் இச்சையை நிறைவேற்றாதிருப்போம் என்று பவுல் சொல்லி யிருக்கிறார் [கலா. 5:16]. இந்த அம்சத்தில் எந்தக் கிறிஸ்தவரும் மற்றவர்களைவிட அநுகூலங்களைப் பெற்றிருக்கிறார் என்று சொல்ல முடியாது. ஆவிக்கேற்றபடி நடப்பது என்பது நாம் எடுக்க வேண்டிய ஒரு தீர்மானமாகும். நாம் எவ்வளவாக மாம்சத்தின் இச்சைகளுக்கு இடம் கொடுக்காமல் இருக்கிறோமோ அவ்வளவாக ஆண்டவரின்மீது பயபக்தி கொண்டிருக்கிறோம் என்று அர்த்தமாகும்.

பவுல் இப்படி எழுதியிருக்கிறார்:

கிறிஸ்துவினுடையவர்கள் தங்கள் மாம்சத்தையும் அதின் ஆசைஇச்சைகளையும் சிலுவையில் அறைந் திருக்கிறார்கள் [கலா. 5:24].

கிறிஸ்துவுக்குச் சொந்தமானவர்கள் *தங்கள் மாம்சத்தைச் சிலுவையில் அறைந்திருக்கிறார்கள்* [கடந்த காலம்] என்று பவுல் கூறுவதைக் கவனியுங்கள். நாம் தேவனுக்குக் கீழ்ப்படிந்து, பாவத்தை எதிர்க்கும்படியாகத் தீர்மானித்து, பாவ இயல்பைச் சிலுவையில் அறைந்திருக்கிறோம். எனவே இப்போது மாம்சத்தைச் சிலுவையில் அறைய வேண்டியதில்லை, அறையப்பட்டதை மீறாமல் காத்துக் கொள்ள வேண்டும்.

எப்போதுமே மாம்சத்தைச் சிலுவையில் அறையப்பட்டதாக வைத்துகொள்ளுவது கடினம் என்றாலும், அதைச் செய்ய முடியும். நாம் மாம்சத்தின் தூண்டுதல்களுக்கு இடம் கொடுக்காமல், உள்ளான மனுஷனின் வழிநடத்துதலின்படி செயல்படுவோமானால், நாம் கிறிஸ்துவின் ஜீவனை வெளிப்படுத்தி, அவருக்கு முன்பாகப் பரிசுத்தத் தில் நடப்போம்.

## மறுபடியுமாக உருவாக்கப்பட்ட நமது ஆவியின் இயல்பு

மறுபடியுமாக உருவாக்கப்பட்ட நமது ஆவியின் இயல்பைக் குறிப்பிட ஒரு சொல்லைச் சொல்ல வேண்டுமானால் அது *கிறிஸ்து*

என்பதாகும். இயேசுவைப்போன்ற இயல்பைக் கொண்டவராகிய பரிசுத்த ஆவியானவரின் மூலமாக இயேசுவின் இயல்பு நம்மில் வாசம் பண்ணுவதை நாம் அறிவோம். ''இனி நான் அல்ல, கிறிஸ்துவே எனக்குள் பிழைத்திருக்கிறார்'' என்று பவுல் எழுதியிருக்கிறார் [கலா. 2:20].

அவருடைய திறமையும் இயல்பும் நமக்குள் இருக்கிறபடியால், நம்மால் கிறிஸ்துவைப்போல வாழ முடியும். நமக்கு இன்னுமதிகமாக அன்பும், பொறுமையும், இச்சையடக்கமும் தேவைப்படவில்லை. ஏனென்றால் அதிகமாக நேசிக்கும், அதிகப் பொறுமையும் இச்சை யடக்கமும் உள்ள நபர் நமக்குள் வாசம்பண்ணுகிறார்! நாம் செய்ய வேண்டியதெல்லாம் நம் மூலமாக அவர் வாழும்படி அனுமதிப்பதுதான்.

என்றாலும் நமக்கு ஒரு பெரிய சத்துரு இருக்கிறான். அவன் இயேசுவின் இயல்பை எதிர்த்துப் போரிடுகிறான். அது நம்மூலமாக வெளிப்படுத்தப்படுவதைத் தடுக்கிறான். நாம் நமது *மாம்சத்தைச்* சிலுவையில் அறைய வேண்டும் என்று பவுல் சொல்லியதில் வியப்பேதுமில்லை. நமது மாம்சத்தைக் குறித்து எதையேனும் செய்ய வேண்டிய பொறுப்பு நமக்கு இருக்கிறது. இதைக் குறித்துத் தேவன் எதையாவது செய்யும்படி வேண்டிக்கொண்டு வெறுமனே இருக்கக் கூடாது. பவுலும் தனது மாம்சீகமான இயல்புகளைக் குறித்த பிரச்சினை களை எதிர்நோக்கினார். ஆனால் அவர் பொறுப்பை ஏற்றுக்கொண்டு, அதை மேற்கொண்டார்:

> மற்றவர்களுக்குப் பிரசங்கம்பண்ணுகிற நான்தானே ஆகாதவனாய்ப் போகாதபடிக்கு, என் சரீரத்தை ஒடுக்கிக் கீழ்ப்படுத்துகிறேன் [1 கொரி. 9:27].

நீங்கள் ஆண்டவருக்கு முன்பாகப் பரிசுத்தமாக நடக்க விரும்புவீர்களானால், நீங்களும் உங்கள் சரீரத்தை உங்கள் ஆவியின் அடிமையாக ஆக்க வேண்டும். உங்களால் அதைச் செய்ய முடியும்!



# 11

# பரிசுத்த ஆவியானவரின் ஞானஸ்நானம்

ஒருவர் நடபடிகளின் புத்தகத்தை வாசிக்கும்போது, அதன் ஒவ்வொரு பக்கத்திலும் பரிசுத்த ஆவியானவரின் கிரியைக்கான நிரூபணத்தைக் காண முடியும். நடபடிகளின் புத்தகத்திலிருந்து நீங்கள் பரிசுத்த ஆவியானவரின் கிரியைகளை அகற்றுவீர்களானால், அதில் எதுவுமே எஞ்சியிருக்காது. மெய்யாகவே, ''உலகத்தைக் கலக்கும்படி'' அவர் முதல் சீஷர்களுக்கு வல்லமையளித்தார் [பார்க்க, அப். 17:6].

இன்று உலகத்தில் சபை துரிதமாகப் பரவிக்கொண்டிருக்கும் பகுதிகள் இயேசுவைப் பின்பற்றுகிறவர்கள் பரிசுத்த ஆவியானவருக்கு ஒப்புக்கொடுத்து, அவருடைய வல்லமையினால் செயல்பட்ட பகுதி களாகும். இது நமக்கு வியப்பளிக்கக் கூடாது. நாம் நமது சொந்த முயற்சிகளைக் கொண்டு பத்தாயிரம் ஆண்டுகளில் சாதிக்கக்கூடியதை விடப் பரிசுத்த ஆவியானவரால் பத்தே வினாடிகளில் அதிகமாகச் சாதிக்க முடியும். எனவே சீஷரை உருவாக்கும் ஊழியர் விசுவாசிகளின் வாழ்க்கையிலும் ஊழியங்களிலும் பரிசுத்த ஆவியானவரின் கிரியையைக் குறித்து வேதவசனங்கள் போதிப்பதைப் புரிந்துகொள்ள வேண்டும்.

நடபடிகளின் புத்தகத்தில், விசுவாசிகள் பரிசுத்த ஆவியானவரின் ஞானஸ்நானத்தைப் பெற்று, ஊழியத்துக்காக வல்லமை பெறுவதைக் குறித்து நாம் அடிக்கடி பார்க்கிறோம். அவர்கள் அனுபவித்ததை நாமும் அனுபவிக்கும்படியாகவும், அவர்கள் பெற்றபடி பரிசுத்த ஆவியானவரின் அற்புதமான உதவியைப் பெறும்படியாகவும், இதைக் குறித்து ஞானத்தோடு கற்றுக்கொள்ள வேண்டும். ஆதி அப்போஸ்தலர்களின் காலத்தோடு பரிசுத்த ஆவியானவரின் அற்புதமான கிரியைகள் முடிவுக்கு வந்துவிட்டன என்று சிலர் கூறினாலும், அப்படிப்பட்ட